International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

வரலாற்று நாவல்: தோற்றம், தன்மை மற்றும் நோக்கம்

முனைவர் ச. சந்திரா
தமிழ்த்துறை தலைவர்
பாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தச்சூர், கள்ளக்குறிச்சி 606213

ஆய்வு நோக்கம்

தமிழ் மொழிகளில் தமிழர் வாழ்வியலை இலக்கியத்தோடு இசைந்து தருகின்ற இலக்கிய வகைகளில் வரலாற்று நாவல்களும் தனியிடம் வகிக்கின்றன இத்தகைய வரலாற்று நாவல்களின் வரலாற்றை அறிதல் ஆய்வு நோக்கமாகும்

முதன்மைச் சொற்கள்

நாவல், திறனாய்வு, வரலாறு

முன்னுரை

இக்கால இலக்கிய வகைகளில் சிறப்பானதோர் இடத்தை வகிப்பது நாவலாகும். நாவல் பொதுவாக மக்களுக்கு மகிழ்ச்சியூட்ட இயற்றப் பெறும் கற்பனைக் கதை தான் என்றாலும், அது உலக வாழ்க்கையின் ஆதாரமின்றி மனம்போன போக்கில் செல்லும் வெறும் கற்பனையல்ல, அது அழகு, காதல், வீரம், கோபம் முதலிய மானிட உணர்ச்சிகளையும், மானிட இயல்புகளின் போராட்டங்களையும் தழுவியே இயற்றப் பெறுகின்றது. நாவல் இலக்கிய வளர்ச்சியில் பல துறைச்சார்ந்த நாவல்கள் வெளிவந்துள்ளன. இக்கட்டுரை வரலாற்று நாவல்களின் பொதுவான நிலையினையும், சிறப்பான நிலையினையும் ஆராயும் வகையில் அமைந்துள்ளது.

நாவல் பெயர்க் காரணம்

நாவல் என்னும் சொல் நவீனம், புதுமை என்னும் பொருளைக் கொண்டுள்ளது. "Novella என்னும் இத்தாலி மொழிச் சொல்லிலிருந்தே இது பிறந்தது. இச்சொல்லுக்குக் கொலம்பியா என்சைக்ளோப்பீடியா உரைநடையில் அமைந்த நெடுங்கதை என்று விளக்கம் தருகிறது" மேலும் கோதண்டராமன் அவர்கள்,"மத்திய காலத்தில் ஐரோப்பிய வீரர்களின் தீரச் செயல்களையும் அவர்களுடைய காதலையும் கூறும் கதைகள், கவிதை உருவில் தோன்றின. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இத்தாலியக் கலைஞர்கள் 'நூவேல்' என்னும் பெயர் கொண்ட கதைக் கொத்துக்களை வெளியிட்டனர். நாம் தற்காலம் வழங்கும் 'நாவல்' என்னும் சொல் 'நூவேல்' என்ற இச்சொல்லினின்றே வருகின்றது." என்று குறிப்பிடுகின்றார். ஆதலால் நாவல் என்ற சொல் தொடக்கத்தில் 'காதல்' என்ற பொருளிலேயே வழங்கப் பட்டது எனவும், இது மனித வாழ்க்கையைச் சுவைபடக் கூறும் வடிவமாகவும் திகழ்ந்தது

எனவும் அறிய முடிகிறது. 'வெப்ஸ்டர் அகராதி' நாவல் என்பதற்கு மனித உணர்ச்சிகள், எண்ணங்கள் அவர்தம் செயல்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டுகிற 'உரைநடையில் அமைந்த நீண்ட கதை' என விளக்கம் தருகிறது.

நாவலின் தோற்றம்

நாவலின் தாயகம் இத்தாலி. இத்தாலியைச் சேர்ந்த பொக்காசியோ (1313–1373) எழுதிய 'டெகா மெரான்' கதைகளே நாவல் இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தன. 'செர்வாண்டிஸ்' 1547-1616இல் படைத்த 'டான்குவிச்சாட்' என்ற நாவல் உலக புகழ் பெற்றது. சிலர் ஜப்பான் மொழியில் 'முரசாக்கி சீமாட்டி' எழுதிய 'கெஞ்சிக் கதையை' உலகின் முதல் நாவல் என்பர். 1740-இல் 'ரிச்சர்ட்சன்' எழுதிய 'பாமெல்லா' என்பதே ஆங்கிலத்தின் முதல் நாவல் என்பர். எனவே 'ரிச்சர்ட்சன்' ஆங்கில நாவலின் தந்தை என அழைக்கப்பட்டார். "முதல் ஆங்கில நாவல் தோன்றியதற்கு நூற்று இருபத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவின் முதல் நாவலான 'துர்கேசநந்தினி' வெளிவந்தது. இதனை கி.பி.1865இல் பங்கிம் சந்திரர் வங்காள மொழியில் எழுதி வெளியிட்டார்" திறனாய் வாளர்கள் 'பக்கிம் சந்திர சட்டர்ஜியின்' நாவல்களிலிருந்து தான் இந்தியாவில் நாவல் இலக்கியம் தோன்றியது என்பர்.

இந்நாவல் தோன்றிப் பதினொரு ஆண்டுகள் கழித்தே 1879இல் 'மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை' பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதினார். இந்நாவலே தமிழில் வெளிவந்த முதல் நாவலாகும். இது தமிழ் நாவல் என்ற வகையில் மிக முக்கியமான தாகும். 'அசன்பே சரித்திரம்' இது தமிழில் வெளிவந்த இரண்டாவது நாவல் என்ற பெருமையையும் ஈழத்தில் வெளிவந்த முதலாவது நாவல் என்ற பெருமையையும் பெற்றது. நாவல்கள் "தொடக்கத்தில் பல தொகுதிகளாக எழுதப்பட்டு வந்தது. பதினேழாம் நூற்றாண்டில் ஒரு நாவல் பதினாறு தொகுதி அளவிற்கும், பின்னர் நான்கு தொகுதி அளவிற்கும், மூன்று தொகுதி அளவிற்கும் சுருங்கித் தற்போது ஒரு நாவல் ஒரு தொகுதியாகவே வெளிவரும் அளவினை பெற்றுள்ளது." என கோ.வே.கீதா குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நாவல்களின் அளவு காலந்தோறும் மாற்றமடைந்துள்ளது. மேனாட்டுத் திறனாய்வாளரான 'இ.எம். பாஸ்டர்' நாவலின் அளவைப் பற்றிக் குறிப்பிடும் போது பொதுவாக ஒரு நாவல் என்பது குறைந்தது 50,000 சொற்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகின்றார். நாவலின் தோற்றம் குறித்து ஆராய்கின்ற பொழுது கி.பி.14ஆம் நூற்றாண்டிலேயே நாவல் தோற்றம் பெற்றுவிட்டது என்பதை அறியமுடிகிறது.

வரலாற்று நாவல்கள்

கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து வரலாற்று மாந்தர் களில் சிலரை நாவல் மாந்தராகக் கொண்டு, வரலாற்றுச் சூழல், கலை, மொழி, பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு, உறைவிடம் முதலியவற்றை வெளிப்படுத்தும் முறையில் எழுதப் பெறும் நாவல்கள் வரலாற்று நாவல்கள் எனப்படும். தமிழர்களின் வாழ்க்கை முறை சூழல் முதலிய சில இன்று சான்றுகளுடன் வரலாற்று நாவல்களில் காணக்கிடைக்கின்றன. "ஒரு படைப்பாளர் என்றோ நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சிகளைத் தம் மனக்கண்முன் நிறுத்தி கதை மாந்தர்களைப் படைத்துத் தம்முடைய கற்பனையைக் கலந்து கலைத் திறன் கொண்டு படைப்பதே வரலாற்றுப் புதின மாகும்" என்று சூ.இன்னாசி, வி.ஆனந்த மூர்த்தி ஆகியோர் கூறுகின்றார்கள். "நாவல் என்ற சொல் இயல்பான உலகனுபவங்களை ஒட்டிச் செல்லும் இலக்கிய வகையைக் குறிக்கும்" என்று கைலாசபதி குறிப்பிடுகிறார். எனவே வரலாற்று நாவல்கள் என்பவை கடந்த காலத்தில் நிகழ்வுகளையும், சூழ்நிலை களையும் எடுத்துக் காட்டும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றன என்பதை அறிய முடிகிறது.

கடந்தகால நிகழ்ச்சிகளைக் கதை நிகழ்ச்சி யாகக் கொண்டு வாழ்ந்த மாந்தர்களைப் பாத்திரங்களாக்கி வரலாற்றுச் செய்திகளைக் கதைப் புலத்தோடு நோக்கிப் பின்னி அமைப்பது தான் வரலாற்று நாவல் சென்ற தலைமுறையில் அல்லது அரை நூற்றாண் டுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வைத்து எழுதுவது வரலாற்று நாவல் என்கிறோம். ஆனால் வியட்நாமில் நடந்த

போரை வைத்து எழுதப்பட்ட நாவல்களைக் கூட இன்றைய அமெரிக்க இலக்கியம் வரலாற்று நாவல் என்று கருதுகிறது. இன்று தமிழ் மொழியில் வரலாற்று நாவல்கள் என்ற பெயரில் பல இராசா, ராணிக் கதைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் தமிழறிஞர் களால் வரலாற்று நாவல்கள் என்ற தலைப்பில் அடைக்கப்பட்டவை ஏறத்தாழ 250 நாவல்கள் ஆகும்.

வரலாறு - வரையறை

வரலாறு என்பது வெறும் கற்பனைக் கதையன்று, உண்மை என்று நம்பத்தக்க சான்றுகளைக் கொண்டு நாம் ஏற்றுக் கொள்ளும் ஒரு செய்தித் தொகை, இது நாளாக, நாளாக எவ்விதத் தடையுமின்றி வளர்ந்து கொண்டே வரும். வரலாறு என்பது கடந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இடையில் உள்ள இணைப்பு. அத்தகைய வரலாற்றிற்குத் திறனாய்வாளர்கள் பலர் தத்தம் கருத்துக்களைத் தந்துள்ளனர். "வரலாறு மனிதனுடைய பரிணாமத்தின் கதை, ஒரு மாகடல்; அது மிகப் பரந்ததும் ஆழ்ந்ததும் ஆம், அறிவுலகில் வரலாற்றறி வின்றி ஓர் அணுவும் அசையாது" என்று ஈ.எச்.கார் அவர்கள் வரலாறு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாறு வரைதலென்பது அடிப்படைச் சான்றுகளை ஆய்ந்து, கடந்த காலத்தில் நடந்ததை நடந்தவாறே, உண்மையையெடுத் துரைக்க வேண்டுமென்ற நோக்கோடு பயிற்சியும், முயற்சியும் கலந்தப் பணியாகும் என்று தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு குறிப்பிட்டுள்ளது. இன்றைய சமூக மாற்றங் களும், சம்பவங்களும் வருங்காலத்தில் வரலாற்றுச் சான்றுகளாக மாறிவிடுகின்றன. உப்புச் சத்தியாகிரகமும், காந்திமகானின் அறப்போரும், நேருஜியின் சமாதானத் தூதும், லால்பகதூர் சாஸ்திரி ருஷ்ய நாட்டிற்குச் சென்று அங்கு உயிர் துறந்ததும், சீனப் படையெடுப்பும், வங்கத்தில் நடந்த அரசியல் மாற்றங்களும், அறிஞர் அண்ணா வின் மறைவு குறித்து லட்சோப லட்ச மக்கள் துயரத்தில் ஆழ்ந்ததும் இன்று மறக்க முடியாத வரலாற்று நிகழ்ச்சிகளாகி விட்டன என்று திரு.விக்ரமன் குறிப்பிடுகின் றார். எனவே அறிஞர்களின் கருத்துப்படி அன்றைய மன்னர்கள் ஆட்சிக்காலம் தொட்டு நேற்றைய ஆங்கிலேயர் ஆட்சி வரை நடை பெற்ற நிகழ்ச்சிகளை வரலாறு என்றே அறியமுடிகிறது.

உண்மை வரலாற்றுச் செய்திகள்

பொய்யான வரலாற்றுச் செய்திகள் வாசகர் மனத்தே படிதல் கூடாது என்பது எத்துணை இன்றியமையாததோ அத்துணை இன்றியமை யாதது உண்மை வரலாற்றுச் செய்திகள் கற்போர் நெஞ்சிற் கல்வெட்டாக வேண்டும் என்பதும் இன்றைய இளைய சமுதாயத்தி னரின் நெஞ்சில் உண்மை வரலாறை உரைப்பனவாகவும், வரலாற்றுக் கல்விப் பயிற்சி அளிப்பனவாகும், வரலாற்றின் மீது வேட்கையை ஊட்டுவனவாகவும், வரலாற்று நாவல்கள் அமைய வேண்டும். பல வகை சான்றுகளையும் திரட்டி ஒருங்கிணைத்துp பொருந்துவது பொருந்தாததென பாகுபடுத்தி உண்மையானவற்றைத் தேர்ந்துரைப்பதே வரலாற்றின் குறிக்கோளாகும் என்று தமிழ்நாட்டு வரலாற்று குழு ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். வைரமுத்து அவர்கள் இன்றைய தலைமுறையினருக்குரிய சிந்தனை களாக இன்றைய தலைமுறைக்கு இரண்டு குணங்கள் வேண்டும். எதிர்காலம் குறித்த முன்னோக்கும் உணர்வு, வரலாறு குறித்த பின்னோக்கும் அறிவு ஆகிய இரண்டும் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஆகையால், திறனாய்வாளர்களின் கூற்றுகள் படிப் பழங்காலம் முதல் தற்காலம் வரை வரலாற்று நாவல் காலக் கண்ணாடியாக நின்று முதலிடம் வகிக்கிறது, என்பதை அறிய முடிகிறது.

வரலாற்றின் முக்கியத்துவம்

வரலாற்றின் முக்கியத்துவம் எதுவென்றால் நிகழ்காலச் சம்பவங்களின் உள்பொருளை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு கடந்த கால நிகழ்வுகளைத் தெரிந்து கொள்வதே யாகும். பழக்கமில்லாச் சூழ்நிலையில் திக்குத் தெரியாது திணறிக் கொண்டிருப் பதைத் தவிர்க்க வரலாறு பயன்படுகிறது. "வரலாற்றின் நோக்கம் மக்களை அறிவுடை யாராக்குவதாகும். இத்தகு சிறப்பார்ந்த வரலாற்றினை வரலாற்று நூல்களைக் காட்டிலும் வரலாற்று நாவல்களே மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றச் செய்வதாகும்" என்று இராசகோபாலன் குறிப்பிடுவதன் மூலம் மக்களிடத்தில் வரலாற்று

நாவலுக்குள்ள சக்தியை அறிய முடிகிறது.

ஒரு நாடு வறுமையுற்று, வீழ்ச்சியுற்று, தன் பெருமையை உணராது மறந்து, தாழ்வுற்று, அடிமையுற்று கிடக்கின்ற காலங்களில், அந்த நாட்டின் பண்டையப் பெருமைகளை யும், வீரத்தையும், இலட்சியங்களையும், உன்னத வாழ்க்கை முறைகளையும் ஆதாரங்களோடு காட்டி மக்களை எழுச்சியுற செய்யும் மகத்தான ஒன்றே வரலாறு. இந்த வகையில் வரலாற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தப் பல வரலாற்றுத் துறை வல்லுநர் கள் பெருமளவு உதவி புரிந்திருக்கிறார்கள்.

வரலாற்று நாவலின் நோக்கம்

தன் பாட்டன் எப்படி வாழ்ந்தான் என்பதை தெரிந்து கொள்ளும் போதுதான் தன்னுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது என்னும் உண்மை புலப்பட்டு தன் பேரனின் வாழ்வு எவ்விதமாக அமைய வேண்டும் என்பதற்கு ஒரு தெளிவு ஏற்படும். சரித்திரமும், சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்ட நவீன இலக்கியங்களும் இயற்றப்படுவதற்கு இதுதான் அடிப்படை நோக்கம் என்று 'ஜெகசிற்பியன்' குறிப்பிடுகின்றார். "இறந்த காலத்தை எண்ணிப் பார்க்காதவன் நிகழ்காலத்தில் யதார்த்தத்தை உணர்ந்து எதிர்காலத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லும் தகுதியைப் பெற மாட்டான்" வரலாறு படிப்பதன் நோக்கம் நாம் வளர்ந்து வந்த முறையை அறிவதும் அதுபோது நாம் செய்த தவறுகள், செய்யத் தவறியக் கடமைகள் ஆகியவற்றை அறிந்து நம்மைத் திருத்திக் கொள்வதுமாக இருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

புதினத்தின் முக்கிய நோக்கம் மனிதனின் தவறுகளையும், கொடுமைகளையும் விளக்குவதே, வேறெந்தக்கலையும் இந்த நோக்கத்திற்காக இந்த அளவு படைக்கப் படவில்லை என்று ஹென்றி லூயிஸ் குறிப்பிடுகின்றார். நாவல்கள் எல்லாம் மனித வரலாற்றை மையமாகவும், முழுமையாகவும் வைத்து எழுதப்படுவதால் 'கல்யாண்குமார் தாஸ்குப்தா' நகைச்சுவையோடு 'History' என்ற சொல்லைப் பிரித்து 'His – story' என்று எழுதுவது இங்குக் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

"சரித்திர நாவல்கள் என்பவை பொதுவாகப் பெரும்பாலும் வெறும் கதையம்சத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் கதை நடைபெறும் காலத்திய நடைமுறைப் பழக்க வழக்கங்கள் பண்பாடு, வீரம், காதல் முதலிய பல பெருமைகளையும் சுவையாக எடுத்துச் சொல்வையாகும்" என்று பழ சிதம்பரம் குறிப்பிடுகின்றார். திறனாய்வாளர் களின் கூற்றுகள் படி பார்க்கும்போது வரலாறு என்பது, முன்பு நடந்த நிகழ்ச்சி களை அப்படியே படிப்பதற்குப் பலருக்குப் பொறுமை இராது. ஆனால் கதைவழியில் படைக்கும் போது அவற்றைப் பலரும் விரும்பிப் படிக்கின்றனர். கற்பனையுடன் சேர்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளைப் படைப்பதன் நோக்கம் வருங்காலத் தலைமுறையினர் தமது நாட்டைப் பற்றிய பழம் பெருமைகளை அறிந்து கொண்டு, இனிதாம் செய்ய வேண்டிய கடமைகள் என்னவென்பதை உணர்ந்து செயல்பட ஏதுவாக இருக்கும்.

வரலாற்று நாவலின் தன்மை

வரலாற்று நாவல்கள், சமுதாய நாவல்களை விடக் கருத்தூன்றி எழுதப்பட வேண்டியவை யாகும். காலமும், களமும் நன்கு கவனித்துக் கதையை அமைத்துச் செல்ல வேண்டும். வரலாற்று நாவல்கள் மக்களின் செயல்பாடு களை வெளிப்படுத்தும் கலைவடிவம் மட்டுமன்று, நூற்றாண்டுகால உணர்வுகளின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றன. "வரலாற்று நாவல்கள் அறிஞர் பலரால் எழுதப்பட்டு இன்றும் புகழுடன் விளங்கக் காண்கிறோம். அவற்றுள் உண்மைகளும், புனைவுகளும் ஏறக்குறைய சமமாகக் கலந்திருக்க வாய்ப்புகள் உள்ளன" என்று கோ.தங்கபாலு குறிப்பிடுகின்றார்.

வரலாற்று நாவல் என்பது ஒரு முரணான சொற்றொடர். நாவல் என்பது கற்பனையை அடிப்படையாகக் கொண்டது. வரலாறு என்பது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது என்று வரலாற்றின் தன்மையாகப் பிரான்சிங் ஹோவே ஸ்டட்டார்ட் கூறுகிறார். வரலாற்று உண்மைகளையும், வரலாற்று உணர்வுகளையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையவர்களாலேயே நல்ல வரலாற்று நாவலை எழுத இயலும். வரலாற்று நிகழ்ச்சிகளை அப்படியே கூறுவது சரித்திரப் பாடப்புத்தகம், வரலாற்று நிகழ்ச்சிகளோடு கற்பனை கலந்து எழுதுவது வரலாற்றுப்

புதினம் என்று விக்கிரமன் குறிப்பிடுகின்றார். எனவே நாவலின் தன்மைப் பற்றிய திறனாய்வாளரின் கருத்துக்கிணங்க ஆராயு மிடத்து நாவலில் கற்பனை கலந்து இலக்கியம் சமைப்பது இன்று, நேற்று ஏற்பட்ட புதுமுறையல்ல. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும், ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும், சேக்கிழாரின் பெரிய புராணமும் கற்பனை கலந்து உருவான இலக்கியங்களாகும்.

வரலாற்று நாவல்களில் எழுதுபவரின் கற்பனை முக்கிய இடம் வகிக்கிறது. இதில் அரசகுடும்பத்தினர் மட்டுமே பாத்திரங்களாக விளங்குவதில்லை. மன்னருக்கு உதவும் அமைச்சர், தளபதி, விசுவாசமுள்ள படையாட் கள், காவல்காரர்கள், பணிப்பெண்கள், துரோக உள்ளம் படைத்தவர் என்று பல கதைமாந்தர்கள், கதை வளர உறுதுணை யாக இருப்பார்கள். வரலாற்று உண்மை நிகழ்ச்சிகளுக்கு மாறுபடாமல் கற்பனையைக் கலந்து எழுதும் போது ஓர் வரலாற்று நாவல் உருவாகிறது என்பதை உணர முடிகிறது.

வரலாற்று நாவல் எழுதும் முறை

வரலாற்று நாவல் எழுதுவோர் பழைய வரலாற்று உண்மைகளுக்கு முரண்படாமல் எழுத வேண்டும். இக்காலத்துக்கும் ஓரளவு பொருந்துமாறு எழுத வேண்டும். காலம் கடந்துபோன பழைய குப்பைகளைப் புரட்டுவது போல் அமைந்தால் படிப்பவர்க ளுக்கும் சுவை குன்றிப்போகும். கவிஞனுக் குத் தனியான உரிமை இருப்பது போல் இந்த வரலாற்று ஆசிரியர்களுக்கும் வரலாற்றுச் செய்திகளை ஓரளவு மாற்றிக் கொள்ளும் உரிமை இருக்கிறது என்று தா.பாலகிருஷ்ணன் படைப்பாளர்களுக்குள்ள உரிமைகளைக் குறிப்பிடுகின்றார். வரலாற்றுக்கும் கதைக்கும் நெருக்கமான உறவு உண்டு. வரலாற்றை உற்று நோக்குவோருக்கு அதன் உள்ளீடாக ஒரு கதைப் பின்னல் ஓடிவருவதை உணர முடியும் என்று அறிஞர் பெருமக்கள் கூறுவதிலிருந்து, வரலாற்று நாவல்களில் பொருத்தமானவைகளையும், சுவையானவை களையும் விரிவுபடுத்தி மற்றவைகளைக் குறைத்தோ மறைத்தோ சொல்லவேண்டும். எல்லாம் கற்பனையாக அமைந்தாலும் படிக்கும் ஆர்வம் அற்றுப்போகும். இக்காலத்திற்கு உகந்த கருத்துக்கள் என்று அவற்றை அளவிற்குமேல் புகுத்தினாலும் அவை கதையோடு ஒட்டாமல் உதிர்ந்து விடும் என்பதை அறியமுடிகிறது.

ஒரு நாடு வறுமையுற்று, வீழ்ச்சியுற்று, தன் பெருமையை உணராது மறந்து, தாழ்வுற்று, அடிமையுற்று கிடக்கிற காலங்களில் அந்த நாட்டின் பண்டைய பெருமைகளையும், வீரத்தையும், லட்சியங்களையும் உன்னத வாழ்க்கை முறைகளையும் சித்தரித்துக் காட்டுகிற சரித்திர நவீனங்களின் பங்கு மிகவும் மகத்தானதாகத் தான் இருக்கும். அத்தகைய நவீனங்களுக்கு அப்பொழுது தான் முழுப்பயணம் இருக்கும் என்று ஆர்.வி. குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாட்டின் நீண்ட வரலாற்றிலே எத்தனை, எத்தனையோ, அரிய பெரிய நிகழ்ச்சிகள் கால வெள்ளத்தில் கரைந்து மறைந்து போய்விட்டன. வரலாற்று உண்மைகள் உள்ளது உள்ளபடி நமக்கு அதிகமாக கிடைத்திருக்கின்றன என்று கூறுவதற்கில்லை. அரசியல், கலை, சமூகம், சமயம் முதலிய பல்வேறு துறைகளிலும் தமிழ்நாடு பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறது, வழிகாட்டியிருக்கிறது, சிறப்புற்று விளங்கியி ருக்கிறது. இதற்கெல்லாம் பலப் பலச் சான்றுகள் இருக்கின்றன. அதுபோல வரலாற்றிலே புகழ்மங்கி, ஒளிகுன்றியும் தனது செல்வாக்கிழந்தும் இருந்திருக்கிறது என்பது நன்கு புலனாகிறது.

வரலாற்றில் புறம் போகாமல், வரலாற்றைத் தம் விருப்பப்படியெல்லாம் வளைத்துச் சிக்கல் சேர்க்காமல் எழுதிச் செல்ல வேண்டும் என்பதை அறியமுடிகிறது. ஆனால் இன்று வரலாற்று நாவல்கள் எழுதுவது ஒன்று தான் எல்லாவற்றிலும் எளிய காரியம் என்பது போலப் பல வரலாற்று நாவல்கள் தோன்றி வருகின்றன. இவ்வகை நாவல்கள் வெறும் வெளியுணர்ச்சிகளையும், பகைமை யுணர்ச்சிகளையும் தூண்டும் நிலைக்களன் களாக மட்டுமே அமைந்துவிடுகின்றன. “சமுதாய நிஜங்களை இலக்கியமாக்கி மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் எழுத்தாளனே நமக்கு வேண்டும். சமூக நிர்பந்தங்களால் அமுங்கிக் கிடக்கும் மக்களுக்கு அவற்றின் பின்புலன்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை கழுவிச் சுத்தப்படுத்த

வேண்டும் என்கிற நியாயமான வேகத்தை வாசகர்களின் அடிமனதில் விதைத்து, அதே நேரத்தில் இலக்கிய உருவம் கெடாமல் இலக்கியம் படைக்கும் படைப்பிலக்கிய வாதியே நமக்கு வேண்டும்" என்று வரலாற்று நாவல் எழுதும் முறையைப் பற்றி வையவன் குறிப்பிடுகின்றார்.

தமிழில் தோன்றிய முதல் வரலாற்று நாவல்

1895இல் தமிழில் முதல் வரலாற்று நாவலான 'மோகனாங்கி' வெளிவந்தது. இதனைத் திருக்கோணமலை 'த.சரவண முத்துப்பிள்ளை' எழுதினார். முதல் தமிழ் நாவல் தோன்றிப் பதினைந்து ஆண்டுக ளுக்குப் பின்னரே, தமிழ் வரலாற்று நாவல் வெளிவந்தது. 1919ஆம் ஆண்டு இதே நாவல் சுருக்கப்பட்டு 'சொக்கநாத நாயக்கர்' என்ற பெயரில் வெளிவந்தது. இந்நாவலே தமிழில் வெளிவந்த முதல் வரலாற்று நாவல் என்ற பெருமையைப் பெறுகின்றது.

தொகுப்புரை

நாவல் என்ற சொல் தொடக்க காலத்தில் காதல் என்ற பொருளிலேயே வழங்கப் பட்டிருக்கின்றது.

வரலாற்று நாவல்கள் மக்கள் மனதில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

மேல் நாட்டுப் பாதிரியார்கள் தமது கொள்கைகளைப் பரப்ப உரைநடையை மிகச் சிறந்த கருவியாகப் பயன்படுத்தியு ள்ளனர்.

நாவலின் அளவு காலந்தோறும் மாற்ற மடைந்துள்ளது.

கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து வரலாற்று நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாவல்களின் தந்தை என அழைக்கப்படுபவர் மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையே ஆவார். இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரத்தி லிருந்து தமிழ் நாவல்களின் வளர்ச்சி தொடங்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. இராமலிங்கம்.மா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ், இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு - 1973.
2. இராஜகோபாலன்.தி, வரலாற்று நாவல்களில் வரலாற்றுச் செய்திகள், வேம்புப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 1978.
3. இன்னாசி.சூ, ஆனந்தமூர்த்தி.வி, புதினப் படைப்புகள், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை – 5, முதற்பதிப்பு - 1990.
4. கார்.ஈ.எச், வரலாறு என்றால் என்ன? அலைகள் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் -2004.
5. கீதா.கோ.வே, தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், உரிமை பதிப்பகம், சென்னை-5, முதற்பதிப்பு, சனவரி – 1979.
6. கோதண்டராமன்.பி, உலகநாவல் இலக்கியம், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை – 98, முதற்பதிப்பு, டிசம்பர் – 1990.
7. கைலாசபதி.க, தமிழ் நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 1977.
8. சிதம்பரம்.பழ, வெற்றிவேல் வீரதேவன் (பதிப்புரை), பாரதி பதிப்பகம், சென்னை – 17, முதற்பதிப்பு – 1985.
9. சீதாலட்சுமி.வே, தமிழ் நாவல்கள் (அகரவரிசை), உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 113, முதற் பதிப்பு, ஆகஸ்டு – 1985.
10. பாலசுப்பிரமணியன்.சி, சோழ மகுடம் (அணிந்துரை), வானதி பதிப்பகம், சென்னை – 17, முதற்பதிப்பு – 1993.
11. பூவண்ணன், கல்வியின் வரலாற்று நாவல்கள், வானதி பதிப்பகம், சென்னை -17, முதற் பதிப்பு, ஜூன் -1998.